மாணவர்களே !நீங்கள் தமிழ் மொழியினைப் பேச படிக்க பெறும் பேறு பெற்றுள்ளீர்கள். சற்று கண் மூடி கற்பனையில் மூழ்குங்கள்.....பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் தோன்றிய ஒரு அழகான் இனிய மொழியினைப் பேசுகின்றீர்கள்.ஆம் எப்போது தமிழ் மொழிஉருவானது என்ற ஆய்வு இன்னும் தொடர்கின்றது.அதனால் தான் தமிழர்கள் தம் மொழியை என்று தோன்றியது எனப் புரியாத தெய்வ தத்துவத்துடன் இணைத்து மொழியைக் கடவுளாகப் போற்றுகின்றனர்.இது தமிழரின் தனிச் சிறப்பு. தமிழன்னை, தமிழ்த்தாய், கன்னித்தமிழ், செந்தமிழ், பைந்தமிழ், தண்டமிழ் என்று பல படப் புகழ்கின்றோம்.ஏன் ?

இயற்கை மனித இனத்திற்கு மட்டுமே பேசும் தனித் தன்மையைத் தந்துள்ளது.இந்த உண்மையை உணர்ந்த தமிழர் தம் மொழியை தெய்வமாக்கிக் கொண்டாடுகின்றனர்.[தமிழ் அன்னையின் அழகான் சிலை மதுரை மாநகரில் தமுக்கம் மைதானத்தில் உள்ளது.தமிழ் அன்னை இட்துகாலை மடித்து,வலது காலைத் தொங்கவிட்டு அமர்ந்து உள்ளாள்.வலது கை இயல்,இசை,நாடகம் என்ற முத்தமிழின் மூன்று பிரிவுகளைக் காட்டுகிறது.இடது கை ஒலைச்சுவட்களை ஏந்தி உள்ளது.பழங்காலத்தில் தமிழகத்தை ஆண்ட மூன்று மன்னர்கள் குலம்----------சேரர் , சோழர் ,பாண்டியர் எனப்படும்.அவர்கள் மொழியின்மீது மரியாதை வைத்து வளர்த்தனர்.இவர்களை மதிக்கும் வகையில் சேரரின் வில்--அம்பு சின்னம்,சோழரி புலிச்சின்னம், பாண்டியரின் மீன் சின்னம் தமிழன்னை அருகில் பொறிக்கப்பட்டுள்ளன.

நித்ய கன்னிகையாம் தமிழ்மகள்........பல ஆயிரம் ஆண்டுகளுக்கு மொன் உலகில் பல மொழிகள் இருந்தன.இந்தியாவில் வடபகுதியில் சமஸ்கிருதம்,பாழி,ப்ராக்ருதம் என் மொழிகள்வழங்கின.தென்பகுதியில் தமிழ்,கன்னடம்,தெலுங்கு போன்ற மொழிகள் வழங்கின.இவற்றுள் தமிழ் மிவும் பழமை மிக்கது.தேவபாஷை எனப்படும் சமஸ்கிருதம் மிகவும் அற்ப்தமான் பாஷை.இன்று எப்படி உலகம் முழுவதும் இங்லீஷ் பரவி உள்ளதோ அதைப் போல் அன்று சமச்கிருதம் பரவியது.இன்று அம்மொழி கலக்காத இந்திய மொழிகளே இல்லை.,இது உண்மை.ஆனால் இன்று அம்மொழி இந்து மதச் சடங்குகளிலும்,வீட்டு பூசைகளிலும்,கோயில்களிலும் மட்டுமே பயன் படுகிறது.உணவைப் பயன் படுத்தினால் தானே நல்லது?இல்லை என்றால் கெட்டுவிடும் இல்லையா?அது போல் ஒரு மொழியும் மக்களால் பேசப்பட்டல் தான் பல காலம் வாழும்.மாணவர்களே .,உங்களை அதிகக் கட்டுப்பாட்டுடன் வைத்து இருந்தால் பள்ளிக்கூடமே வெறுத்து விடும் அல்லவா?அது போலத்தான் சமஸ்கிருதம் தன் உயர்ந்த நிலையைப் பாதுகாக்க அதிகமான் கட்டுப்பாடுகளை மகளுக்கு விதித்தது.கஷ்டமான் எதையும் நாம் விரும்புவோமா ?அப்படித்தான் மக்கள் அம்மொழியை மெதுவாக விட்டு வேறு மொழிகளைப் பயன்படுத்தினர்.

தமிழர் தமிழின் மகத்துவம் மாறாது,அதே சமயம் காலத்திற்கு ஏற்ப மக்களின் தேவைக்கு ஏற்ப மொழியை மாற்றினர்.ஆனால் கி.பி.பதிமூன்றுக்குப்பின் தமிழ் மொழியும் மக்களை மறந்து காசு பண ஆசையில் சின்ன ராஜாக்களை மகிழவைக்க வேண்டி மிகக் கஷ்டமான மொழியாகப் புலவர்களால் மாற்றப்பட்டது.ஆனால் அக்கால இலக்கியங்கள் பல இன்று நம்மால் மறக்கப்பட்டன.இன்று தமிழ் அறிவியல்,கணினி,தொழில் நுட்பம் எனப் பல துறைகளில் காலத்திற்கு ஏற்ப மாறி வாழ்ந்து வருகிறது.மொழியின் உடல்---உயிர் எது?நாம் தான் புரிந்ததா ? தமிழ் என்னும் திகட்டாத இனிப்பு
‘‘ யாம் அறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிதாவதெங்கும் காணோம் !’’ இன்றார் மஹாகவி பாரதியார்.அவர் வெறும் மொழி வெறி உடையவர் அல்லர்.பல மொழிகள் பேசவும் படிக்கவும் தெரிந்தமிழின் சிறப்பு தான் என்ன?
சப்தம்,இசை,எலக்கியம்,இலக்கணம் என்ற வளங்களை உடைய தமிழ் காலம் காலமாக மக்களை நெறி தவறாத வாழ்க்கையில் நடத்தி வருகிறது.
மனிதனாகப் பிறந்ததன் பயன் உன்ன?ஆன்மீக உணர்வுடன் தெய்வீக வாழ்வை வாழ்வதே ஆகும்.இவ்வழிமுறையை சலைக்காமல் கூறி வருவதால் தமிழ் இனிமை,பெருமை,வளமை உடையது எனலாம்.ஆன்மீக உனர்வுதன் வாழும் மனித வாழ்வே முழுமையான வாழ்வு.இதுவே மோட்ச வாழ்வு.இதை ’வீடு பேறு’ என்ரு தமிழ் கூறும்.இப்பேற்றினை அடைவதே மானிதனின் வாழ்க்கைப் பயன்.அவனை இப்பேற்றினை நோக்கி ர்ளிமையாக அழைத்துச் செல்கிறது தமிழ்.எனவே தான் இதை இனியமொழி என்பர்.வீடு பேறே மிக உயர்ந்தது.மிக உயர்ந்த நிலை ’செம்மை’ எனப்படும்.எனவே தமிழ் செம்மொழிச் செந்தமிழ் ஆனது.

பாருக்குள்ளே நல்ல நாடு.................